CENTRE FOR POLICY ALTERNATIVES

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட தடுத்து வைத்தல் கட்டளைகளின் பயன் தொடர்பான அறிக்கை

**ஆகஸ்ட் 24, 2022**

பல்கலைக்கழகங்களிற்கிடையிலான மாணவர் சங்கங்களின் ஒன்றிய ஒருங்கிணைப்பாளரான வசந்த முதலிகே, மற்றும் ஹசந்த ஜீவந்த, வணக்கத்திற்குரிய கல்வேவ ஸ்ரீதம்ம தேரோ ஆகியோரை, ஒரு 90 நாட்களுக்கு தடுத்து வைப்பதற்கு அனுமதித்து, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடு) பிரிவு 9 இன் கீழ் மூன்று தடுத்து வைத்தல் கட்டளைகளை விடுப்பதற்கு, பாதுகாப்பு அமைச்சராக அவரது பதவிநிலையின் கீழ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. அண்மைய போராட்டங்களில் அவர்களது ஈடுபடுதலுக்காக குற்றம் சுமத்தப்படும் இம் மூன்று சந்தேகநபர்களையும் தடுத்து வைப்பதற்கான இந்த முயற்சி நிறைவேற்று அதிகாரத்தால் பயங்கரவாதத் தடைச்சட்டம் துஷ்பிரயோகிப்படுவதின் மற்றொரு உதாரணமாக அமைகின்றதுடன், அச்சட்டத்தினை இரத்துச் செய்வதற்கு தொடர்ச்சியான கோரிக்கைகள் பல தசாப்தங்களாக அங்கே எழுப்பப்பட்டும் வந்துள்ளன. மேலும், போராட்டத்தில் வெளிப்படையான ஈடுபாட்டிற்கான இந்தத் தடுத்து வைத்தல், போராட்டாக்காரர்களை இலக்கு வைத்து, மாற்றுக் கருத்துகளை மௌனிக்க வைக்கும் பொருட்டு ஒரு பீதி நிலையை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி - இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முயற்சியாகவே காணப்படுகிறது.

3 மாதங்கள் வரைக்குமான ஒரு காலத்திற்கு தடுத்து வைக்கும் கட்டளைகள் மேற்கொள்வதற்கான அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சருக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 9 வழங்குகின்றதுடன், அது மேலும் 3 மாதங்களுக்கும், அதன் பின்னதான ஒரு நேரத்தில் 12 மாதங்கள் வரைக்கும் அது நீடிக்கப்படப்படுவதற்கு முடியும். தற்போது, பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியே உள்ளார்.

ஆரம்பத்தில் 1979 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 29, சட்டம், அது ஆரம்பித்ததிலிருந்து மூன்று வருடங்களுக்கு மட்டுமே செல்லுடியாகும் என அப்போது ஏற்பாடளித்தது. எனினும், 1982 இல் அந்த ஏற்பாடு நீக்கப்பட்டது, அதன் மூலம், அது இலங்கை சட்டங்களில் ஒரு நிரந்தரமான அம்சமாக அச்சட்டத்தை ஆக்கியது. பின்னர், நாலு தசாப்தங்களாக, பதவிக்கு வந்த அரசாங்கங்களால், தம்மை விமர்சிப்பவர்கள் மற்றும் சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்கு சித்திரவதை, அச்சுறுத்துதல் மற்றும் தொல்லைப்படுத்துதல் என்பவற்றுக்கு ஆவணப்படுத்தப்பட்ட சம்பவங்களுடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் உபயோகிக்கப்பட்டு வந்தது.

1979 இல், பயங்கரவாதத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அது ஒரு 2/3 பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று அப்போதைய அரசாங்கத்தின் ஓர் உறுதிமொழியுடன், ஒரு 'அவசரச் சட்டமூலமாக', அது உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது என்பதை, மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. அதனொரு விளைவாக, அரசியலமைப்பில் மட்டுப்படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாடுகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் மீறுகின்றதா என்பதில் மட்டும் (அதாவது, சட்டமூலம் சட்டமாக வருவதற்கு ஒரு சர்வசன வாக்கெடுப்பையும் தேவைப்படுத்துகிறதா) உயர் நீதிமன்றம் கவனம் செலுத்தியது. அதனால், அரசியலமைப்பு ஏற்பாடுகளுடன் முரண்பாடு கொண்டிருந்த போதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு சட்டமாக வந்தது.

மேலும், 2017 இல், ஜனாதிபதி விக்கிரமசிங்க அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் மீது ஒரு நிறுத்தி வைத்தலை இலங்கை அரசாங்கம் அறிவித்தது, என்பதையும் மா.கொ.நி கவனத்தில் குறித்துக் கொள்கிறது. எந்த விதத்திலும் நிறைவேற்றப்பட்டிராத உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஒரு கொள்கைக் கூற்றாக 'ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவற்றின் கோட்பாடுகளுக்கு முரணாக இருக்கின்றதும் மற்றும் நீதியின் நோக்கத்தை முறியடிக்கின்ற, அடிப்படை உரிமைகளின் சட்டபூர்வ அப்பியாசித்தலைப் பலவீனப்படுத்தும் ஒரு வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கம் துஷ்பிரயோகிக்கப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்தும் தேவை குறித்து அரசு கவனம் கொண்டிருப்பதை' அப்போதைய பிரதம மந்திரியும் கூட ஏற்றுக் கொண்டிருந்தார். ஆர்ப்பாட்டக்காரர்களை இலக்கு கொண்டும் மற்றும் மாற்றுக் கருத்துகளைத் தடுப்பதற்கான மிக அண்மைய நடவடிக்கைகள் உட்பட, பயங்கரவாதத் தடைச் சட்டம் இப்பொழுது எவ்வாறு பாவிக்கப்படுகின்றது என்பதற்கு, அவ்வாறானதொரு கூற்று முரணானதாகும்.

தவறு அல்லது குற்றமொன்றைப் புரிந்தவராக சந்தேகிக்கப்படும் ஆளெவேரனையும் புலன்விசாரணை செய்வதற்கு உபயோகிக்கப்படக் கூடிய போதுமான பல சட்டங்களை இலங்கை கொண்டுள்ளது. அதனால் போராட்டக்காரர்களை இலக்கு வைப்பதற்கும் மற்றும் அவர்களது நடவடிக்கைகளை பயங்கரவாத செயற்பாடுகளுக்கு சமனாக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உபயோகிப்பதும் மிகவும் ஆபத்தானது, அச்சமேற்படுத்துகிறது என்பவற்றுடன் முற்றிலும் பொருத்தமற்றதாகும். இது, இலங்கை முன்னொருபோதும் கொண்டிராத ஒரு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கும் இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் அதன் அனைத்துப் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மற்றும் அவற்றை முன்னேற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பது முக்கியமானதாகும். அதனால், தடுத்து வைக்கும் கட்டளைகளை உடனடியாக மீளப்பெறுவதற்கும், மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கான இலங்கையின் கடைப்பிடித்தலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கும், ஜனாதிபதியிடம் மா.கொ.நி கோருகிறது. தங்களது அடிப்படை உரிமைகளை அப்பியாசிப்பதற்காக தனிப்பட்ட ஆட்களை தொல்லைப்படுத்துதல், மிரட்டுதல் மற்றும் இலக்கு வைத்தல் என்பவற்றிலிருந்து அதிகாரிகள் விலகியிருப்பதற்கு, மா.கொ.நி வலியுறுத்துகிறது. சட்டவாட்சி மற்றும் ஜனநாயக நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றை நிலைநிறுத்துவதில் புதிய அரசாங்கம் நேர்மையாக பற்றுறுதி கொண்டிருப்பின், பிரஜைகள் மற்றும் சர்வதேச சமூகம் மத்தியில் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட நடவடிக்கை முக்கியமான ஒரு நடவடிக்கையாகவுள்ளது.